**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ.,எம்.எல்.,**

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.**

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**I.D.5/2020**

சரண்குமார்,
த/பெ. எம்.சந்தோசம்,
இருளஞ்சேரி கிராமம்,
நரசிங்கபுரம் அஞ்சல்,
திருவள்ளூர் மாவட்டம் - 631402. ... மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

நிர்வாகம்,
ஹன்சங் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
எண்.107/109,ஒட்டன்தாங்கல் கிராமம்,
தென்னேரி அஞ்சல், வாலாஜபாத் ஒன்றியம்,
காஞ்சிபுரம் தாலுக்கா & மாவட்டம் - 631304. ... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 18.06..2026 அன்று முதல் நிலை விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் திருவாளர்கள். P.கணேஷ்ராம், A.ரேகா, S.R.பூபாலசந்திரன், U.மனோகர் மற்றும் M.எழிலரசி ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.P.ராதிகா, P.கணேஷ், S.மகாலட்சுமி,

C.R.விஷ்ணுதீபக் மற்றும் R.கார்த்திக் ஆகியோர் ஆஜராகியும், நடத்தப்பட்ட முதல்நிலை விசாரணையில் ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**<u>முதல் நிலை விசாரணைக்கான உத்தரவு</u>**

1. மனுதாரரை 31.07.2016 தேதியிட்ட உத்தரவின் மூலம் பணியிலிருந்து நீக்கிய உத்தரவை ரத்து செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணியும், பணித்தொடர்ச்சியும், பின்சம்பளமும், இதர பண மற்றும் பணி பலன்களும் செலவுத்தொகையுடன் வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள தொழிற்தாவாவின் சுருக்கம் :-</u>**

எதிர்மனுதாரர் தொழிற்சாலை 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட ஸ்டீல் சுருள்களை வெட்டி குளிர்சாதன பெட்டி, சலவை இயந்திரம், குளிரூட்டும் பெட்டி ஆகியவற்றிற்கான மோல்டுகளை செய்து அதை சாம்சங் போன்ற முன்னணி நிறுவனங்களுக்கு சப்ளை செய்து பெரும் லாபம் ஈட்டி வருகிறது. மேலும் எதிர்மனுதாரர் நிர்வாகம் Ford

கார்களுக்கான இரும்பு இருக்கைகளை தயாரித்து அதை Lear & KM Sheet கம்பெனிகளுக்கு சப்ளை செய்து லாபம் ஈட்டி வருகிறது. இத்தொழிற்சாலையில் 200 நபர்கள் நேரடி உற்பத்தி பிரிவில் ஈடுபடுகிறார்கள். அதில் 3 தொழிலாளர்கள் மட்டும் நிரந்தர தொழிலாளர்களாகவும், 23 தொழிலாளர்கள் அப்ரெண்டீஸ், பயிற்சியாளர்கள் என்றும், மீதமுள்ள 150 தொழிலாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்கள் என்ற பெயரில் வேலை செய்து வருகிறார்கள். 3 நிரந்தர தொழிலாளர்களை தவிர அனைத்து தொழிலாளர்களும் ஒரே வகையான நேரடி உற்பத்தி பணிகளை தான் செய்து வருகிறார்கள். தொழிலாளர் நல சட்டங்களின் பலன்களை தொழிலாளர்களுக்கு கொடுக்காமல் மறுப்பதற்காகவே தொழிலாளர்களை நிரந்தரம் செய்யாமல் பயிற்சியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் என்று பெயரளவில் அழைத்து வருகிறது.

மனுதாரர் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் திருமதி.அபிநயா

மனிதவளத்துறை அதிகாரி மற்றும் திரு.திருமூர்த்தி (குவாலிட்டி சீனியர் இன்ஜினியர்) ஆகியோரால் நேர்காணல் செய்யப்பட்டு குவாலிட்டி இன்ஸ்பெக்டர் டிரெய்னி என்ற பணியில் 05.01.2015 அன்று பணி நியமனம் செய்யப்பட்டார். மனுதாரர் பணியில் சேர்ந்த நாள் முதல் நேரடி உற்பத்தி பணியில் ஈடுபட்டு வந்தார். அவருக்கு நிர்வாகம் எவ்வித பயிற்சியும் அளிக்கவில்லை. மனுதாரர் பணிக்கு சேர்ந்த போது அவருடைய மாத ஊதியம் ரூ.8,500/- மனுதாரர் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் சிறப்பாக பணிபுரிந்ததன் காரணமாக அவரது மாத ஊதியம் ரூ.900 உயர்த்தப்பட்டு ரூ.9400/- ஆக ஏப்ரல் மாதத்திலிருந்து சேர்த்து ஜூன் மாதத்தில் வழங்கப்பட்டது. எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் நடைபெறும் இரண்டு ஷிப்டுகளிலும் மனுதாரர் வேலை செய்து வந்தார்.

எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் தொழிலாளர் நல சட்டங்கள் மீறப்பட்டு வந்ததை உணர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் தங்களுக்கென ஒரு நியாயமான தொழிற்சங்கத்தை தேர்ந்தெடுப்பதாக

முடிவு செய்து 08.11.2015 அன்று ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு என்ற தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்தனர். உறுப்பினர்களாக இணைந்த விவரம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு 01.02.2016 தேதியன்று தெரியப்படுத்தப்பட்டது. இந்த சங்கத்தில் மனுதாரரும் உறுப்பினராக இருந்து செயல்பட்டு வந்தார். இதனை விரும்பாத நிர்வாகம் பல்வேறு வகையில் தொழிலாளர்களை பழிவாங்க ஆரம்பித்தது. அவ்வாறு பழி வாங்கும் நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களில் மனுதாரரும் ஒருவராவார்.

எதிர்மனுதாரர் நிர்வாகம் 24.06.2016 அன்று மனுதாரர் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி காரணம் கோரும் அறிவிப்பை மனுதாரர் ஷிப்டில் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது கொடுத்தது. அதில் மனுதாரர் 10.06.2016 & 20.06.2016 ஆகிய தேதிகளில் சலவை இயந்திரம் WM Frame-ல் Miss Location & Damage Partsஐ ரிஜெக்ட் செய்யாமல் விட்டுவிட்டதாகவும், அதில் Accepted Tag போட்டதாகவும், குற்றம் சுமத்தப்பட்டது. துறை

தலைவர் திரு.வீரராகவன் அதை கேட்ட போது மனுதாரர் பதில் கூறவில்லை என்றும், குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அதற்கு மனுதாரர் 20.06.2016 தேதியிட்ட கடிதத்தில் திரு. வீரராகவன் பணிக்கு ஆஜரான போது மனுதாரருக்கு பணி வழங்காமல் 22.06.2016, 23.06.2016, 24.06.2018 ஆகிய தேதிகளில் அலுவலக அறையில் வைத்து செய்யாத தவறை செய்ததாக ஒத்துக்கொண்டு கடிதம் எழுதிக்கொடுக்குமாறு மிரட்டியதாகவும், அதற்கு உடன்பட மறுத்த காரணத்தினால் அவருக்கு ஆங்கிலத்தில் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கியதாகவும், அதனை மனுதாரர் தமிழில் கோரிய போது மறுக்கப்பட்டதால் ஆட்பேனையுடன் பெற்றுக்கொள்வதாக எழுத முயற்சித்த போது அதற்கு அனுமதி வழங்காமல் மனுதாரரை மிரட்டி கையொப்பம் பெற்றதாகவும், ஆங்கிலத்தில் உள்ள அறிவிப்பை தமிழாக்கம் கோரிய கடிதம் நிர்வாகத்திற்கு அளித்தார் என்றும் நிர்வாகம் 30.06.2016 அன்று மனுதாரருக்கு தமிழாக்கத்தினை அனுப்பியது என்றும் தெரிவிக்கிறார்.

மனுதாரர் 30.06.2016 தேதியிட்ட காரணம் கோரும் அறிவிப்பிற்கு 02.07.2016 தேதியில் பதிலை அளித்தார். அவர் உற்பத்தி ஒருங்கிணைப்பாளராக இருந்து ஒரு பேலட்டில் உள்ள அனைத்து பொருட்களையும் 100% ஆய்வு செய்து அனுப்புகிறார். மாதிரி எடுக்கும் முறையாக மனுதாரர் பேலட்டில் உள்ள 5 மாடல்களை மட்டுமே ஆய்வு செய்கிறார். அவற்றில் எந்த குறைபாடும் இல்லை என்று திருப்தி அடைந்ததால் அது ஏற்கப்பட்ட முத்திரை என சான்றளிக்கப்படலாம். குறைப்பாடுள்ளதாக கூறப்படும் பொருட்கள் மனுதாரரால் ஆய்வு செய்யப்பட்ட மாடல்கள் அல்ல. 10.06.2016 மற்றும் 20.06.2016 ஆகிய தேதிகளில் நடந்த சம்பவத்திற்காக எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 24,06,2016 அன்று தான் விளக்கம் கோரும் அறிவிப்பை வழங்கியது. இந்த செயல் மனுதாரர் ULFல் உறுப்பினராக இருப்பதால் அவரைப்பழிவாங்கும் நோக்கில் தான் விளக்கம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் இன்றுவரை பொது மோலாளரை சந்திக்கவில்லை. மனுதாரர் பொது

மேலாளருடன் ஆங்கிலத்தில் உரையாடினார் என்ற குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது. எவ்வித ஆதாரமும் அற்றது. மனுதாரர் தனது கடமையை செய்யும்போது கவனக்குறைவாகவும், மேலதிகாரிகளின் உத்தரவுக்கு கீழ்படியவில்லை என்றும், மனுதாரர் செய்யாத ஆவணங்களில் கையெழுத்திடுமாறு நிர்வாகம் கட்டாயப்படுத்தப்பட்டதாக நிறுவனத்திற்கு எதிராக ஒரு புகாரை அளித்தாலும் நிலையாணை பிரிவுகள் 37(76),37(1),37(75) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு 11.07.2016 தேதியில் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதற்கு மனுதாரர் 14.06.2016 தேதியில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்து பதில் அளித்துள்ளார். குற்றப்பத்திரிக்கைக்கு மனுதாரரிடமிருந்து எந்த பதிலும் வருவதற்கு முன்பே எதிர்மனுதாரர் நிர்வாகம் திரு,ஷம்சுதீன் இப்ராஹிம் விசாரணை அதிகாரியாக 15.07.2016 தேதியில் நியமிக்கப்பட்டு 17.07.2016 தேதியில் விசாரணை அறிவிப்பு அனுப்பியது. 20.07.2016 தேதியில் விசாரணை நடைபெறும் என்று கையொப்பமிட்ட 3 நாட்களுக்குள் விசாரணை

நடத்தப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் அந்த அறிவிப்பு மனுதாரருக்கு ஒருபோதும் அனுப்பப்படவில்லை. விசாரணை அறிவிப்பு மனுதாரருக்கு கிடைக்கவில்லை. அதனை தொடர்ந்து நிர்வாகம் 27.07.2016 தேதியிட்ட இரண்டாவது விளக்கம் கோரும் அறிவிப்பை மனுதாரருக்கு அனுப்பியது அதில் விசாரணை 20.07.2016 தேதியில் நடத்தப்பட்டு விசாரணை அறிக்கை 25.07.2016 தேதியில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இரண்டாவது காரணம் கோரும் அறிவிப்பு மனுதாரருக்கு அனுப்பியதற்கு 29.07.2016 தேதியில் பதில் அளித்தார். விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் எதிர்மனுதாரர் நிர்வாகம் 31.07.2016 தேதியில் மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டதாக ஆணை வழங்கப்பட்டது. எனவே மனுதாரர் 31.07.2016 தேதியிட்ட உத்தரவின் மூலம் பணியிலிருந்து நீக்கிய உத்தரவை ரத்து செய்து, மனுதாரருக்கு மீண்டும் பணியும், பணித்தொடர்ச்சியும், பின்சம்பளமும், இதர பண மற்றும் பணி பலன்களும் மற்றும்

செலவுத்தொகையுடன் வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலுள்ள சங்கதிளை எதிர்மனுதாரரால் ஒப்புக்கொண்டுள்ளவற்றை தவிர மற்றவற்றை மறுகிறார்.

05.01.2015 அன்று மனிதவள அதிகாரி அபினயா மற்றும் குவாலிட்டி சீனியர் இன்ஜீனியர் திருமூர்த்தி ஆகியோரால் நடத்தப்பட்ட நேர்காணலின் மூலம் மனுதாரர் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் பயிற்சிக்காக எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் சேர்க்கப்பட்டார். மனுதாரர் நிரந்தரப்பணியாளராக நடத்தப்பட்டார் என்பது மறுக்கப்படுகிறது.

மனுதாரர் 05.01.2015 முதல் 31.07.2016 அன்று பணி நீக்கம் செய்யப்படும் வரை ஒரு பயிற்சியாளராக மட்டுமே கருதப்பட்டார். மேலும் எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரர் பெற்ற தொகை சம்பளமே அல்ல அது பயிற்சியாளருக்கான உதவித்தொகை மட்டுமே, மேலும் மனுதாரர்

22.06.2016, 23.06.2016 மற்றும் 24.06.2016 ஆகிய தேதிகளில் பணிக்கு வந்ததாக கூறுவதை எதிர்மனுதாரர் மறுக்கிறார்.

02.07.2016 அன்று மனுதாரருக்கு வழங்கப்பட்ட விளக்கம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் விளக்கத்தை அளித்துள்ளார். மனுதாரருக்கு எதிர்மனுதாரர் குற்றப்பத்திரிக்கை வழங்கியுள்ளார். 17.07.2016 தேதியிட்ட விசாரணை அறிவிப்பில் போதுமான கால அவகாசம் வழங்கப்படவில்லை என்பதை மறுத்துள்ளார். ஏனெனில் விசாரணையானது 17.07.2016 தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் அதாவது 20.07.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டது.

விசாரணை அதிகாரி இயற்கை நீதி கோட்பாட்டின் கீழ் விசாரணையை நேர்மையான முறையில் நடத்தியுள்ளார், மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதாக கூறி 25.07.2016 அன்று நிர்வாகத்திடம் விசாரணை அறிக்கை அளித்துள்ளார். அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் உள்விசாரணை

அறிக்கையை இணைத்து மனுதாரருக்கு விதிக்கப்படவிருக்கும் தண்டனை குறித்து விளக்கம் கோரி 27.07.2016 தேதியிட்ட இரண்டாவது விளக்கம் கோரும் அறிவிப்பை அனுப்பியுள்ளார். மனுதாரரும் 29.07.2016 தேதியிட்ட விளக்கத்தில் விசாரணை மற்றும் விசாரணை அதிகாரிக்கு எதிராக பண்பற்ற வார்த்தைகளால் சில இரக்கமற்ற கருத்துக்களை முன்வைத்துள்ளார். மேலும் குறைந்த தண்டனை வழங்குவதற்கான தணிக்கும் சூழ்நிலைகள் எதையும் நிர்வாகம் காணாததால் விசாரணை அறிக்கை இரண்டாவது விளக்கம் கோரும் அறிவிப்பு மற்றும் அதன் மீதான விளக்கம் ஆகியவற்றை சேர்த்து 31.07.2016 தேதியிட்ட பணி நீக்க உத்தரவு அளிக்கப்பட்டது. அதனை எதிர்த்து சமரச அலுவலர் முன் மனுதாரரால் எழுப்பப்பட்ட தகராறு நிர்வாகத்தின் மீது எந்ததவறையும் காணாததால் சமரசமுறிவு அறிக்கையை வழங்கியது. இதற்கு எதிராக மனுதாரர் இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் எழுப்பியுள்ளார்.

மனுதாரர் 1947 ஆம் ஆண்டின் தொழிலாளர் தகராறு சட்டப்பிரிவு

2(s)ன் வரையறைக்குள் ஒருதொழிலாளி என்ற கோரிக்கையை முன்வைக்க அவருக்கு ஆவணங்களின்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனேனில் வருகைப்பதிவேட்டில் அவரது பெயர் இடம்பெறவில்லை. 31.07.2016 அன்று அவர் பணி நீக்கம் செய்யப்படும் வரை அவரது பயிற்சியாளர் நிலை மாற்றப்படவில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ் 480 நாட்களுக்கு குறைவான காலத்திற்கு பயிற்சியாளர் நிலையில் பணியாற்றாததால் தமிழ்நாடு சட்டம் எண்.46/1981ன் கீழும் மனுதாரர் ஒரு விளம்புகை பரிகாரம் கோர முடியாது. மனுதாரருக்கு எதிராக ஒரு உள்துறை விசாரணை நடத்தப்பட்டு, விசாரணை அறிக்கையின் பேரில் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். 31.07.2016 தேதியிட்ட பணி நீக்கம் உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டதும், அதைத்தொடர்ந்து அவர் சமரச அலுவலரிடம் அனுப்பட்டதும், அந்த சமரச அலுவர் வழங்கிய சமரச முறிவு அறிக்கையும் அவருக்கு தொழிலாளி என்ற தகுதியை வழங்காது, வழங்கவும் முடியாது. ஏனெனில் மனுதாரருக்கு எதிராகப்பின்பற்றப்பட்ட

மற்றும் இணங்கப்பட்ட அந்த நடவடிக்கைகள் தேவையற்றவை மட்டுமே, அவை அவருக்குத் தொழிலாளி என்ற தகுதியை அளிக்காது. மேலும் மனுதாரரால் கோரப்படும் தொழிலாளி என்ற தகுதியை உள்விசாரணை நடவடிக்கைகள் மற்றும் அதன் மீதான மனுதாரரின் பணி நீக்கம் ஆகியவற்றிலிருந்து அவரே நிரூபிக்க வேண்டும். அந்த தேவையற்ற நடவடிக்கைகள் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு தடையாணையாக செயல்பட முடியாது.

மனுதாரர் கூறுவது போல் அவர் ஒரு தொழிலாளி அல்ல என்பதால் எந்த நேரத்திலும் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பார். மனுதாரர் ஒரு பயிற்சி ஊழியராக இருந்த போதிலும் எந்தவொரு பழிக்குள்ளாகும் நிலையையும் தவிர்ப்பதற்காக இயற்கை நீதிக்கு இணங்கி மனுதாரருக்கு வெளியேற்றத்தைக் காட்டுவதில் நிர்வாகம் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணயின் போது குற்றம் சாட்டப்பட்ட ஊழியர்

நிர்வாகத்தின் தரப்பை ஒப்புக்கொண்டால் எந்தவொரு விசாரணையிலும் வாய்மொழி சாட்சியம் அளிப்பது கட்டாயமில்லை.

சட்டப்படி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டிருப்பதாலும், மனுதாரர் காலந்தாழ்த்திய பின்னர் தனது விளக்கத்தை அளித்திருப்பதாலும், அந்த விளக்கம் திருப்திகரமாக இல்லாததாலும், நிர்வாகம் நன்கு தகுதியும் அனுபவமும் வாய்ந்த விசாரணை அதிகாரியை நியமித்து உள்துறை விசாரணை சட்டப்படி நடத்தப்பட்டதாலும் மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்பட்டிருப்பதாலும், அறிக்கையை இணைத்து இரண்டாவது விளக்கம் கோரும் அறிவிப்பு மனுதாரருக்கு சட்டப்பூர்வமாக வழங்கப்பட்டிருப்பதாலும், முன்மொழியப்பட்ட தண்டனை குறித்து இரண்டாவது விளக்கம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் அளித்த விளக்கம் திருப்திகரமாக இல்லாததாலும், அது தீர்ப்பின் தீவிரத்தைக்குறைப்பதாக இல்லாததாலும், மனுதாரர் சமர்ப்பித்த விளக்கத்தில் உள்ள வார்த்தைகள் எந்தவொரு வருத்தத்தின்

அறிகுறியையும் காட்டாததாலும் எதிர்மனுதாரர் நிர்வாகம் பயிற்சியாளரின் குணம் மற்றும் நடத்தையை கருத்தில் கொண்ட பிறகு அவரைப் பணி நீக்கம் செய்ய முடிவு செய்துள்ளது. அதன்படி மனுதாரர் /பயிற்சியாளர் 31.07.2016 தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அவர் சமரச அதிகாரியிடம் விடுத்த கோரிக்கையும் தோல்வியில் முடிந்தது. ஏனெனில் பணி நீக்கம் செய்யப்படும் வரை மனுதாரரின் நிலை ஒரு பயிற்சியாளராகவே இருந்தது. அவர் ஒரு தொழிலாளி என்று கூறி தனிப்பட்ட முறையில் வழக்குத்தொடுப்பது, நீதிமன்ற நடைமுறையை அவர் தவறாக பயன்படுத்துவதன் ஒரு பகுதியாக இருப்பதால் இந்நீதிமன்த்தில் ஒரு வழக்கை எழுப்ப அவருக்கு எந்தத்தகுதியும் இல்லை அது நிராகரிக்கப்பட வேண்டும். எனவே இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் தொ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தொ.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுளளது. எதிர்மனுதாரர் தரப்பில் அதன் Senior Manager HR and IR சாந்தமூர்த்தி என்பவர் நி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு நி.சா.ஆ.1 மற்றும் நி.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? என்பதே தற்போதைய முதல்நிலை விசாரணைக்கான பிரச்சனையாகும்.**

6. மனுதாரர் பணியில் அலட்சியமாகவும், மெத்தனமாகவும், கவனமில்லாமலும் இருந்து கையாளும் உற்பத்தி பொருட்களின் தரம் குறைந்து போக காரணமாக இருந்துள்ளதாகவும், அச்சம்பவ தினத்தன்று 45 பொருட்கள் கொண்ட பேலட்டில் 5 மாதிரிகளையே பார்த்து தரம் பரிசோதிக்காத நாற்பதையும் சேர்த்து Accepted Tag போட்டுள்ளதாகவும், இவ்வாறு தரம் பார்க்காமலேயே அலட்சியமாகவும், கவனக்குறைவாகவும் இருந்து நிர்வாகத்தின் உற்பத்திப்பொருளின் தரம் குறைய காரணமாக

இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும் இதுபற்றி மேலதிகாரி பலமுறை மனுதாரரை எச்சரித்தும் அவருக்கு கீழ்படியாமல் தொடர்ந்து இச்செயலில் ஈடுப்பட்டுள்ளதாகவும், நிர்வாகத்தின் மீதும் உயர் அலுவலர் மீதும் பொய்யாக புகார் கூறி, மனுதாரர் செய்யாத தவறுக்கு செய்ததாக ஒத்துக்கொள்ளும்படி நிர்பந்தித்ததாகவும், துன்பறுத்தியதாகவும், அவதூறு கூறி, நிர்வாகத்தின் நம்பிக்கையை இழக்கும்படி மனுதாரர் நடந்துக்கொண்டதாக நிலையாணைகள் பிரிவு 37(76)இ 36(1), 37(75) கீழ் ஒழுங்கீன செயலாக குற்றச்சாட்டு குறிப்பாணை தொ.சா.ஆ.5 மனுதாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மனுதாரார் விளக்க கடிதம் தொ.சா.ஆ.6 அளித்துள்ளார். மனுதாரர் அளித்த விளக்கம் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் உள் துறை விசாரணை நடத்த முடிவு செய்து எதிர்மனுதாரர் நிர்வாகம் விசாரணை அதிகாரியை நியமித்து (தொ.சா.ஆ.7) உள்துறை விசாரணைக்கான அறிவிப்பை (தொ.சா.ஆ.8) அளித்துள்ளது.

7. விசாரணை அதிகாரி 20.06.2016 தேதியில் விசாரணை அறிக்கை

(நி.சா.ஆ.1) யை அளித்துள்ளார். அதன் அடிப்படையில் மனுதாரரை பயிற்சி நிறுத்தம் செய்யலாம் என்றாலும் கூட ஒரு வாய்ப்பு வழங்கி மனுதாரரிடம் விளக்கம்(தொ.சா,ஆ,9) கோரப்பட்டுள்ளது. அதற்கு மனுதாரர் அளித்த கடிதம் தொ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் இறுதி நடவடிக்கை ஆணை தொ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.


8. நிர்வாகத்தரப்பில் நி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் நிர்வாக பிரதிநிதி சாந்தமூர்த்தி, குற்றம் சாட்டப்பட்டவர், விசாரணை அதிகாரி ஆஜராகியுள்ளார்கள். அன்றைய தினம் குற்றம் சாட்டப்பட்டவர் சக தொழிலாளியை வைத்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டதற்கு விசாரணை அதிகாரி அதற்கு அனுமதி அளிக்கப்பட்டதாகவும், குற்றம்சாட்டபட்டவரின் வாக்குமூலத்தை கேட்டதற்கு தர மறுத்துவிட்டதாகவும், விசாரணையில் கலந்துகொள்ளமுடியாது என்று கூறியதாகவும், அதனால் விசாரணை அதிகாரி அவருக்கு ஒரு வாய்ப்பு

அளிக்கும் பொருட்டு விசாரணையை ஒத்தி வைப்பதாகவும் கூறியுள்ளார். மேலும் நிர்வாகத்தரப்பு சாட்சிகளாக வீரராகவன் மேலாளர் மற்றும் சாந்தமூர்த்தி HR ஆகிய இருவரின் சாட்சியங்கள் பதிவு செய்தும் நிர்வாகத்தரப்பு வழங்கும் ஆவணங்களை குறியீடு செய்தும் அதனடிப்படையில் விசாரணை முடிவுகள் வழங்க வேண்டும் என்று நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. குற்றம்சாட்டப்பட்ட பணியாளர் உறுதிபட மறுத்து விசாரணையில் தான் கலந்து கொள்ள முடியாது என்று விசாரணை அலுவலரிடம் தெரிவித்துவிட்டதால் அவருக்கு வழங்கப்பட்ட வாய்ப்பினை அவர் பயன்படுத்திக்கொள்ள முன்வராததாலும் இயற்கை நீதிக்குட்பட்டு விசாரணை நடத்தப்பட்டதில் குற்றம் சாட்டப்பட்டவர் பயிற்சியாளர் மட்டுமே என்பதாலும், Probationer கூட கிடையாது என்பதாலும் பயிற்சியில் அலட்சியமாகவும் மெத்தனமாகவும் இருந்ததாலும், கடமை தவறியதாலும் உயரதிகாரியின் சொல் கேட்டு நடக்காததாகலும் அவரை பயிற்சி நிறுத்தம் செய்ய விசாரணை அலுவலர் பரிந்துரைப்பதே


நீதியாகவும், நியாயமாகவும் இருக்கும் என தெரிவித்து விசாரணை முடித்துகொண்டதாக விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

9. நி.சா.ஆ.1யை பரிசீலிக்கையில் விசாரணை அதிகாரி விசாரணை துவங்குவதற்கு முன்பு விசாரணை நடைமுறைகளை பற்றி குற்றம் சாட்டப்பட்டவருக்கு தெளிவுபடுத்தவில்லை. விசாரணை அதிகாரி அளித்துள்ள அறிக்கையில் விசாரணை எத்தனை நாட்கள் நடைபெற்றுள்ளது என்பதை பற்றி தெளிவாக தெரியப்படுத்தவில்லை. நிர்வாகத்தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டதாக கூறியிருந்தாலும், அவர்கள் எந்த எந்த தேதியில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதற்கான ஆதாரமும், அவர்கள் கலந்துக்கொண்டிருந்தால் அவர்கள் அளித்துள்ள வாக்குமூலத்திலும் அவர்களுடைய கையெழுத்தும் போட்டதற்கான ஆதாரமும் இல்லை. விசாரணை அதிகாரி குற்றம்சாட்டப்பட்டவர் பயிற்சியாளராக இருந்தாலும் அவருக்கு போதிய வாய்ப்பு அளித்து விசாரணை நடத்தவில்லை.

குற்றம்சாட்டப்பட்டவர் நிர்வாகத்தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்யவும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. மனுதாரர் மீது குற்றம் சுமத்தப்பட்ட எதிர்மனுதாரர் தான் மனுதாரர் குற்றம் புரிந்துள்ளார் என்று நிரூபிக்க கடமைப்பட்டவராவார். உள்துறை விசாரணையானது ஒரே நாளிலே விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி அளித்துள்ள அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவரின் கையொப்பமும், நிர்வாகத்தரப்பு சாட்சிகளின் கையொப்பம் இல்லை. விசாரணை அறிக்கையில் விசாரணை அதிகாரியின் கையொப்பம் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது.



விசாரணை அதிகாரி 17.07.2016 தேதியில் மனுதாரருக்கு உள்விசாரணை 20.07.2016 அன்று நடைபெறும் என்று தெரியப்படுத்தி அனுப்பிய கடிதத்தில் அவருடைய கையொப்பம் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது.



மேற்குறிப்பிட்டுள்ள விசாரணை அதிகாரியின் இரண்டு கையொப்பங்களும் வெவ்வேறாக உள்ளது. மேலும் விசாரணை நடைபெறும் நாளில் ஆஜரானவர்களின் கையொப்பம் விசாரணை நடவடிக்கை குறிப்புகளில் போடப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு கையொப்பம் போடப்பட்டுள்ளதாக தெரியவில்லை. தொ.சா.ஆ.10யை பரிசீலிக்கையில் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு விசாரணை அறிக்கை வழங்கி விளக்கம் கோராமல் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

10. உள்துறை விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு விசாரணை நடைமுறைகளை பற்றி எடுத்துரைக்கவில்லை. அவருக்கு விசாரணையில் கலந்துக்கொள்வதற்கும், குறுக்கு விசாரணை செய்வதற்கும் போதிய கால அவகாசம் அளிக்காமல் அவசரமாக நிர்வாகத்தரப்பு சாட்சிகளை மட்டும் விசாரணை நடத்திவிட்டு

விசாரணையை முடித்து விசாரணை அறிக்கை அளிக்கப்பட்டிருப்பது இயற்கை நீதிக்கு முரணான செயலாகும். விசாரணையில் போதிய வாய்ப்பு அளித்து குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளியை தீர விசாரிக்கவில்லை என்றே தெரியவருகிறது. 17.07.2016 அன்று விசாரணை தொடங்கப்பட்டு 20.07.2016 அன்று முடிவுற்றதாக ஆவணங்களில் இருந்து தெரிய வருகிறது. எந்த தேதியில் நிர்வாகத்தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர், நிர்வாகத்தரப்பு ஆவணங்கள் யாவை, எந்த தேதியில் நிர்வாகத்தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு வாய்ப்பு அளிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முன் வைக்க அவருக்கு எப்போது வாய்ப்பு அளிக்கப்பட்டது என்பது பொறுத்து விசாரணை குறிப்புகளில் காணப்படவில்லை. மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டியது நிர்வாகத்தின் கடமையாகும். அவ்வாறு இருக்கும் போது விசாரணை அதிகாரி விசாரணை குறிப்பில் மனுதாரர் அவர் தரப்பு நிலையை முன் வைக்க முன்வரவில்லை என

கருத்து தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும், நிர்வாகத்தரப்பில் விசாரணை நடவடிக்கை குறிப்புகள் முழுமையாக தாக்கல் செய்யவில்லை. விசாரணை முடிவு அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் நி.சா.1 தனது குறுக்கு விசாரணையில் விசாரணை நடவடிக்கை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதா என்றால் தெரியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேற்கூறிய காரணங்களின் உள்துறை விசாரணையில் மனுதாரர் குற்றமற்றவர் என்று நிரூபிக்க போதுமான வாய்ப்பு அளிக்காமல், அவசரமாக இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளதாலும், நடத்தப்பட்ட விசாரணை முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்படவில்லை என்றே தெரிய வருகிறது.

12. மனுதாரர் தொழிலாளியா இல்லையா என்பது பொறுத்து சட்டப்பிரிவு 11(A) கீழான விசாரணையில் முடிவு செய்யலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக நிர்வாகத்தரப்பில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதிகோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்படவில்லை என்றே இந்த முதல்நிலை விசாரணைக்கு தீர்வு காணப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.06.19 17:04:18 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.

**மனுதாரர்/தொழிலாளி தரப்பு சாட்சி** :

தொ.சா.1 சரண்குமார்

**மனுதாராா் / தொழிலாளி தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| தொ.சா.ஆ.1 | 24.06.2016 | காரணம் கேட்கும் அறிவிப்பு நகல். |
| தொ.சா.ஆ.2 | 26.06.2016 | மனுதாரரின் கடித நகல் |

| | | |
|---|---|---|
| தொ.சா.ஆ.3 | 30.06.2016 | நிர்வாகம் அளித்த கடித நகல் |
| தொ.சா.ஆ.4 | 02.07.2016 | மனுதாரர் அளித்த விளக்க கடித நகல் |
| தொ.சா.ஆ.5 | 11.07.2016 | குற்றச்சாட்டு குறிப்பாணை நகல் |
| தொ.சா.ஆ.6 | 14.06.2016 | மனுதாரரின் பதில் நகல் |
| தொ.சா.ஆ.7 | 15.07.2016 | விசாரணை அதிகாரி நியமன கடித நகல் |
| தொ.சா.ஆ.8 | 17.07.2016 | உள்விசாரணை அறிவிப்பு நகல் |
| தொ.சா.ஆ.9 | 27.07.2016 | இரண்டாவது காரணம் கேட்கும் அறிவிப்பு நகல் |
| தொ.சா.ஆ.10 | 29.07.2016 | மனுதாரரின் கடித நகல் |
| தொ.சா.ஆ.11 | 31.07.2016 | நிர்வாகத்தின் இறுதி நடவடிக்கை ஆணை நகல். |

<u>**எதிர்மனுதாரர் /நிர்வாக தரப்பு :**</u>

நி.சா.1 சாந்தமூர்த்தி

<u>**எதிர்மனுதாரர் /நிர்வாக தரப்பு சான்றாவணங்கள்**</u> -

| | | |
|---|---|---|
| நி.சா.ஆ.1 | 20.07.2016 | விசாரணை அறிக்கை நகல் |
| நி.சா.ஆ.2 | 20.07.2016 | புகார் நகல். |

S SUJATHA Digitally signed by S SUJATHA Date: 2026.06.19 17:04:09 +0530

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம்,**

**காஞ்சீபுரம்.**